
எழில்

# உள்ளம்





# உள்மை

எழில்

இலங்கை இயேசு சபை ளெியீடு
சனவரி, 2006

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | உண்மை |
| ஆசிரியர் | : | எழில் |
| முதல் பதிப்பு | : | சனவரி 2006 |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | விழிப்புணர்வுக் கவிதை |
| அட்டைப் படம் | : | ஓவியர் சந்துரு |
| தாள் | : | 16 கிலோ மேப்லித்தோ |
| அச்சு எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 116 |
| ஓவியங்கள் | : | பேரா. நடராஜ் |
| வடிவமைப்பு | : | மு. ஸ்ரீதரன் |

**விலை** : ரூ.50.00

## புரட்சி சுமக்கும்...

**இவை கவிதைகள் அல்ல**
**உள்ளக் குமுறல்கள்**
**காயம்பட்ட உணர்வுகள்**
**உயிர் பெறுகின்றன**
**வரி வடிவத்திற்குள் - இவைகள்**
**கற்பனைகள் அல்ல**
**வரலாற்றின் பக்கங்களுக்குச்**
**சொந்தமானவை**

என்ற எழிலின் வார்த்தைகள் எத்தனை சத்தானவை சத்தியமானவை என்பதை இந்த கவிதைத் தொகுதியைப் படிக்கும்போது உணர்கிறேன்.

தமிழகத்தில் கல்வி பயிலும் இலங்கை இயேசு சபை மாணவர்களோ அல்லது தமிழக இயேசு சபைப் புலமைப் பரிசில் பெற்று தமிழகத்தில் கல்வி பயிலும் மலையக மாணவர்களோ, தாங்கள் பயிலும் காலத்தில் கவிதைத் தொகுதிகள் வெளியிடுவது புதிதல்ல.

பட்ட அனுபவங்கள் கவிஞனாக்க, தமிழகத்தில் கிட்டும் வாய்ப்பு அவ்வனுபவங்களை நூலாக வெளியிட வழி சமைக்கிறது. அந்த வரிசையில் சென்னை லொயோலாவில் இளங்கலை பொருளாதாரம் பயிலும் இலங்கை இயேசு சபை மாணவர் எழிலின் கவிதைத் தொகுதி வைகறைப் பதிப்பகத்தில் உதயமாகிறது. இந்த கவிதைத் தொகுதியில் யாழ் மண்ணின் யுத்தகால வாழ்க்கைச் சூழலைக் கண்முன் நிறுத்துகின்றார்.

யுத்தகால வாழ்க்கையை நேரில் அனுபவித்திராதவர்களுக்கு இத்தொகுதி ஒரு வாய்ப்பாக அமைகின்றது; அம்மக்களின் வாழ்க்கையைத் தர்ஷிக்க. எழில் ஒரு குருத்துவ மாணவர்; அதுவும் ஒரு இயேசு சபை மாணவர் மக்கள் பணிக்காகத் தன்னைத் தயார்படுத்தும் ஆர்வமிக்க இளைஞன். அவரது குருத்துவ உள்ளம், கவிதை நெஞ்சம் இப்படிப் பாடுகிறது.

**குருமடங்களே**
**நிறுத்துங்கள் - உங்கள்**
**இயந்திரப் பிரசவங்களை**
**போதும் - உங்கள்**
**ரோபோக் குழந்தைகள்.**
**புதிய நூற்றாண்டில்**
**உங்கள் கருவறைகள்**
**இதயமுள்ள புரட்சியாளர்களைப்**
**பிரசவிக்கட்டும்.**

எழிலின் புரட்சிப் பார்வை - புதுமை - சிந்தனை இத்தொகுதி முழுக்க விரவிக் கிடக்கிறது. எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியில்லாத எதிர்கால இறைப்பணிக்கு தன்னை மேலும் உருவாக்கிக் கொள்ள வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

அருட்பணி செ. மரிய அந்தோணி, சே.ச.
இயேசு சபை மாநில முதல்வர்
31, கிளிபட் பிளேஸ், கொழும்பு - 4
இலங்கை

# வாழ்த்துரை

"உள்மை"! இது உள்ளத்தின் ஆழத்தில் ஊற்றெடுக்கிற உணர்வுப் பதிவேடு; எரிமலைக் குழம்புகளாக வெடித்துச் சிதறுகிற சக்திவாய்ந்த உணர்வுகளின் வெளிப்பாடு. எங்கோ ஒரு மூலையில் இயற்றப்படும் சாமானியர்களுக்கு எதிரான கொள்கைகளும் எடுக்கப்படும் முடிவுகளும், சொந்த மண், உள்ளூர், நாடு, மதம், மொழி, கலாச்சாரம், சாதி, இனம், நிறம் கடந்து சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொருவரையும் இன்னும் ஆழமான சமூக ஈடுபாட்டுக்கு இட்டுச் செல்கின்றன. அவை ஏற்படுத்தும் எதிர்மறையான பாதிப்புகளையும், தாக்கங்களையும் தகுந்த முறையில் சமாளிக்கவும் மற்றும் எதிர்கொள்ளவும் மேலும் அவை பிரசவிக்கும் எதிர்விளைவுகளை வேரறுக்கவும் சமூக அக்கறைகொண்டவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளின் வேகமும் விசையும் புரிகின்றது. எப்பொழுதோ, யாருக்கோ இழைக்கப்படும் / பட்ட கொடுமைகளைப் பற்றிக் கேள்விப்படுவது, அவை ஏற்படுத்திய, தொடர்ந்து ஏற்படுத்துகிற எதிர்மறையான பாதிப்புகளைக் கண்கூடாகப் பார்ப்பது முதலான இவையனைத்தும் சமூகப் பொறுப்புள்ள எவரும் விடுக்கிற எதிர்ப்புக் குரலின் காரணிகளாகின்றன.

சம்பந்தப்படா சமூக ஈடுபாட்டாளரின் உள்ளிருந்து பொங்கியெழுவது அக்கினிக் கோபக் குழம்புகள் என்றால் சொந்தமண்ணிலே கட்டவிழ்த்து விடப்படுகிற அநியாயங்களும் அக்கிரமங்களும் தோற்றுவிப்பது எரிமலைக் குமுறல்களாகத் தான் இருக்க முடியும் என்பதை ஏற்றுக்கொள்ள முடிகிறது. அதிலும் சிறப்பாக இரத்த உறவுகள், சொந்தபந்தங்கள், நண்பர்கள், இவர்களுக்கு இழைக்கப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல்வேறு கொடுமைகள் கண்ணெதிரே நிறைவேற்றப்படும் பொழுது அவைகளைக் காண்போர் மற்றும் பாதிக்கப்பட்டோரின் ஆழ்மனத்தில் கொப்பளிக்கும் எதிர்மறை உணர்வுகளின் வீச்சும் வேகமும் இன்னும் எளிதாகவே புரிந்துகொள்ள முடிகிறது?

'உள்மை' எனும் இந்த உணர்வு அனுபவப் பதிவேட்டின் ஆசிரியர், எழில், பல கொடுமைகளை அனுபவித்தவர்; அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். அவரது உள்ளத்தின் ஆழத்தில் ஆறாத காயங்களை ஏற்படுத்திய நிகழ்வுகள் மற்றும் அனுபவங்களின் வெளிப்பாடாக இப்பதிவேடு பிறந்திருக்கிறது.

வன்முறையும், அக்கிரமங்களும், பணபலமும், படைபலமும் இன்றைய பின் நவீன உலகில் பல்வேறு ஒப்பந்தங்களில் பேரம் பேசுவதற்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களாக இருக்கையில் ஆழ்மனதில் ஏற்படும் சக்திவாய்ந்த உணர்வுக் கொந்தளிப்புகளை அன்பு, நீதியெனும் விழுமியங்களை அடித்தளமாகக் கொண்ட ஆக்கப்பூர்வமான செயலாக் கத்திற்கான படிக்கற்களாக மாற்றும் நிதானமும் போக்கும் இன்றைய வரலாற்றுக் கட்டாயம். உணர்வு வெளிப்பாடு ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கு இட்டுச்செல்லும் உந்துசக்தியாக வேண்டும்; சமதர்ம சமூகமாற்ற ஆர்வலர்களின் சமூக ஈடுபாட்டின் திசையினை வெளிப் படுத்தவும் கூர்மைப்படுத்தவும் அதன் விசையினை பன்மடங்காக்கவும் துணைநிற்கவும் வேண்டும். சகோ. எழில்,சே.ச. ஆக்கிய இவ்வுணர்வுப் பதிவேடு இப்பணியைச் செய்யட்டும். சென்னை லொயோலாக் கல்லூரியில் உள்ள பெர்க்மான்ஸ் இல்ல உறுப்பினர்கள் மற்றும் இளம் குரு மாணவர்கள் சார்பாக இந்நூல் ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டுகிறேன். தன் திறமைகளையும் தம் படைப்பாற்றலையும் தொடர்ந்து ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்த வாழ்த்துகிறேன்.

பணி. **டெனிஸ் பொன்னையா,** சே.ச
இல்லத் தலைவர், பெர்க்மான்ஸ் இல்லம்
இலொயோலா கல்லூரி, சென்னை.

## மொழிதிமிறிப் பேசும்
## மருந்துக் குரல்கள்

உயிர்களின் அழகுகளை காம்புகள் கிள்ளாமல் கண்டு கண்டு களித்த இனம் தமிழினம். இன்று தமிழர்களின் உயிர்களைக் கிள்ளிக் கிள்ளி அழகு பார்க்கிறது உலகம்.

கிள்ளுதல் வலி செய்யும்.
வலி கோபம் செய்யும்.
கோபம் இயக்கம் செய்யும்.
இயக்கம்
விடுதலை செய்யும்.

உணர்ந்தவன் உணர்த்திவிட்டான்.
உணர்ந்துகொண்டவர்கள்
உணராததுபோல் நடிக்கையில்...
ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களே...
நிகழ் தமிழ்ச் சிக்கல்கள்.

இனி... இதனை மக்களே தீர்த்துக்கொள்வார்கள். இதன் வழிமுறை அடுக்குகளின் தலைகீழ் மாற்றம் சரியாய் நடந்திருக்கிறது.

எந்த ஓர் இன விடுதலைப் போராட்டத்திலும்
தலைவர்
இயக்கம்
மக்கள்
இது... தொடக்க அடுக்கு.

மக்கள்
இயக்கம்
தலைவர்...
இது முடிவு அடுக்கு.

இந்த அடுக்கின் அழகுகளை அள்ளி அள்ளி வரலாறு கொஞ்சும் நேரத்தை... குறிப்புகளாய்த்தாம் இந்த கவிதைகளைப் பார்க்கிறேன்.

எங்கெங்கே உரிமை மறுக்கப்பட்டவர்களின் காயங்களிலிருந்து குருதி கசிகிறதோ... அங்கெல்லாம் மொழி திமிறிப் பேசும் மருந்துக் குரல்களாய் இந்தக் கவிதைகள்.

உணர்வுத் தளத்திலும் காலத் தளத்திலும் பாய்ச்சல் தன்மைகள் ஊடாடிய உத்திகளால் உருவாக்கப்பட்டுள்ளவை இந்த கவிதைகள்.

குவிந்து கிடக்கும் படச் சுருள்களை
இரண்டு மூன்று முறை முழுக்கப் பார்த்துவிட்டு..
படத்தொகுப்பு செய்யும் கைதேர்ந்த
படத் தொகுப்பாளனின் இரக்கமற்ற நேர்மையுடன்
எழிலின் கவிதை செய்யும் ஆற்றலை
ஒப்பிடத் தோன்றுகிறது.

வரலாற்றின் இடிபாடுகளை நேரிடையாகச் சந்தித்தவர்களின் மறு வாசிப்புக்குத் தருகிற இந்தப் பிரதிகள் எவ்விதம் செய்யப்பட வேண்டுமோ அவ்விதம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதே எழிலின் வெற்றி.

**கனவில்**
**தூக்கம்**
**விழிக்கிறேன்**
**யாரோ**
**என் தாய் மண்ணை**
**வன்புணர**
**முயல்வதாய்...**

இந்த வரிகள் ஏற்படுத்தும் அடர்த்தி மிகுந்த அதிர்வே... எழிலின் கவிதைகள் நெடுக விரவிக் கிடக்கிறது.

**வீட்டு முற்றத்து**
**கடற்கரை மணலை**
**அள்ளி விளையாட**
**தடுக்கிறது முட்கம்பி.**

**ஆனால்,**
**பார்வைகள் ஏனோ**
**முட்கம்பிகளுக்கூடாக**
**தூரத்தே முகிழ்க்கும்**
**சூரிய உதயத்தை நோக்கி!**

எழிலின் நோக்கம்.. ஏக்கம்.. விரைவில் தீரும்.

**வாழ்க்கை எரிச்சலில்**
**கட்டிய**
**கோவணம்**
**நாறுகிறது.**

**உண்மைதான்..**
**படிமவியலில்**
**புதிய அத்தியாயம்.**

**நீ**
**பூட்டியதால்**
**திறக்கக்**
**கற்றுக்கொண்டோம்.**

**புதைத்ததால்**
**உயிர்ப்பிக்கக்**
**கற்றுக்கொண்டோம்.**

**சாகடித்ததால்**
**வாழக்**
**கற்றுக்கொண்டோம்.**

**அதனால் முடிகிறது..**
**பிணக் காட்டுக்குள்ளும்**
**புது அரும்புகள்!**

**நாராய்க்**
**கிழிந்து தொங்கும்**
**கொங்கைகள்**
**யோனியின்**
**அலறல்**

**மனிதச் சதைகள்**
**வௌவால்களாக**
**மரங்களில்..**
**வரிசையாய்**
**ஆமிகளின்**
**கையில்**
**ஆணுறுப்பு.....**

இந்தக் கவிதை வரிகளில் அடிக்கும் நிணவீச்சத்தின் நடுவே மூக்கைப் பிடித்துப் பயணப்படும் மனித உரிமையும் பெண்ணியப் போலிகளை நோக்கி எழிலின் வார்த்தையில்தான் சொல்ல வேண்டியி ருக்கிறது...

**பெண்ணியம்**
**கனவியல் கோட்பாடல்ல!**
**பராப்**
**பார்த்து**
**வீரம்**
ஊட்டும் தாய்களின் பிள்ளையாய் எழில்.

இந்தத் தொகுப்பு நெடுக.. கவிதைகளுக்குத் தமிழூட்டியிருக்கிறார்..

எதைப் பாட வேண்டும்..
எப்படிப் பாட வேண்டும்..
என்பதில் தெளிவுகொண்ட
எழிலின் கவிதைகள்
வரலாற்றின் வாழ்த்துகளோடு
வாழும் என்கிற
நம்பிக்கையோடு
தாய்மையில் வாழ்த்தும்

அண்ணன்
அறிவுமதி
சென்னை.

# நியாயங்களுக்கான காயங்கள்

இவண்! எழிலின் கவிப்படைப்புகளையும் உரைவீச்சுகளையும் "வாசிக்கின்றோம்" என்று சொல்லுவது அபத்தமான பொய்யாக அமையும்.

ஏன்?

உண்மையில், இங்கு எழிலான கவிகளைப் "பார்க்கின்றோம்". ஈழத் தமிழ்த் திருநாட்டின் தெரு அழுக்குகளை அப்பட்டமாகவே பார்க்கிறோம். அடக்குமுறைகளையும், அநியாயங்களையும் நிர்வாணமாகவே தரிசிக்கின்றோம். குமட்டலாம்.

ஆனால் –

மறந்துவிடக் கூடாது,

உள்ளக் குமுறல்களையல்லவா "கேட்கிறோம்"! அடங்கியது போதும் என அடைப்பட்ட கதவுகளைத் தகர்த்து எறிந்துகொண்டு, தெறித்து வரும் நெஞ்சத்து அழுகைகளைக் "கேட்கின்றோம்".

அடுத்து,

நம் – ஆம், நம் – தமிழினம் அந்த அழகு இலங்கைத் தீவுதனில் சந்திக்கும் அவலங்களையும், அட்டூழியங்களையும் நாமே – ஆம், நாமே–ஒரு கட்டத்தில் "அனுபவிக்கின்றோம்".

அதனையும் கடந்து,

மற்றொரு கட்டத்தில், அதிர்வுகளுக்கும் மேலும் ஆதங்கங் களுக்கும் "ஆளாகின்றோம்".

நமக்கே இப்படியென்றல் –

நாளும் வேதனைகளையும், சோதனைகளையும் சந்திக்கும் ஈழத்துத் தமிழினத்தின் அலைக்கழிப்பை எடுத்தியம்பி மீளாது. எழிலின்

**வாழ்க்கை**
**வீட்டின்**
**கிரகப் பிரவேசத்தின்**
**முன் இடுக்காட்டின்**
**வெற்றிலைத்**
**தானம்**
**வரவேற்றது....** எளிமையான சொற்களாலேயே, எதார்த்தங்களையும், ஏக்கங்களையும், எதிர்பார்ப்புகளையும் தோழர் எழில் எடுத்துரைத் திருக்கும் பாணியே எடுப்பாக இருக்கிறது. சுருக்கென்றும், நறுக்கென்றும் தைக்கிறது, மனதை:

**பசி**
**நாங்கள்**
**உண்ணும்**
**உணவு.**

கற்பனை வளங்களைக் கணக்கில்லாமல் - ஆனால் - காரியமாகப் பயன்படுத்தி, காய் நகத்துகின்றார் கவிஞர். அதுவும் காட்டமான சொல்லோட்டத்தில் ஒரு புதுக் காலத்தைக் கருத் தரிக்கின்றார்:

**உடைத்தெறியுங்கள்...**
**அதிகாரப் பிசாசுகள்**
**குவிக்கப்பட்டு**
**இலஞ்சலத்தியிலும்**
**அநீதி மூத்திரத்திலும்**
**குளிர்காயும்**
**மனித மலக்கூடங்களை.**

அதே சமயத்து, சிரமங்களையும் சிலுவைகளையும் மட்டுமே எடுத்துச் சொல்லிவிட்டு ஓய்வெடுக்க விரும்பவில்லை. எழில், சிறப்பானதொரு நாளைய தினத்தைச் செதுக்கியெடுக்க வேண்டுமென்கிறார். அப்படியானால் பௌர்ணமித் துளிகளை அமாவாசை கும்மிருட்டிலும் இனம் காணவேண்டும்:

**சொந்த வீட்டிலே**
**கைதியாய்**
**உணருகின்றோம்**
**வீட்டு முற்றத்து**
**கடற்கரை மணலை**
**அள்ளி விளையாட**
**தடுக்கிறது - முட்கம்பி**
**ஆனால்,**
**பார்வைகள் ஏனோ**
**முட்கம்பிகளுக்கூடாக**
**தூரத்து முகிழும்**
**சூரிய உதயத்தை**
**நோக்கி**

பிணக்காட்டுக்குள்ளும் புது அரும்புகள் நிகழ்கின்றன. பங்கெடுக்க மட்டும் முடிவெடுத்துவிட்டோமாயின், இலங்கை மண்ணும் விண்ணாகும்.

'எச்சங்கள்', 'இன்னும்', 'காட்டிக்கொடுக்க', 'இரும்புக் கழுகுகள்', 'மனிதத்திற்கான...' என சின்ன சின்ன தலைப்புகளுக்குக் கீழ் பெரிய, பெரிய தரவுகளையும், வரவுகளையும், ஏன் செலவுகளையும் அள்ளி வீசி நமது ஆவேசங்களையும் ஆக்ரோஷங்களையும் உசுப்பிவிட்டிருக்கும் படைப்பாளர் எழிலுக்கு நம் நெஞ்சம் நிறை நன்றிகளையும், வணக்கங்களையும் உரித்தாக்குகிறோம்!

உரியதான முறையிலே -

அவருக்கு வந்தனம் செய்ய வேண்டுமாயின்... ஒரே மூச்சில் இக்கவிகளைப் புரட்டி முடிக்கலாம். மாறாக, காலமெடுத்து, அசைபோடுவோம். அழுத்தங்களை நாம் சந்திக்கும் அனைவருடனும் விவாதிப்போம். உள்ளத்து உறுத்தல்களை உலகமயமாக்குவோம். தனித்து, கூட்டாக, இயக்கமாக இலங்கை இக்கட்டுகளுக்கு இறுதி காணும் வண்ணம் நெருக்கடிகளைப் பிரசவிப்போம். முடிவில்லாப் பிரச்சனையென ஒன்றுண்டா, என்ன?

"... இந்தக் குட்டிப் பிசாசுகளின்
ஒட்டுமொத்த வடிவம்
சமுதாய அவலங்கள்
இன்றும்
அறுந்து போகாத சங்கிலியாய்
இருந்தும்
சுயத்தைத் தொலைத்துவிட்ட
மனிதனின் உள் இருப்பின்
மனிதத்திற்கான
ஆத்மார்த்தத் தேடல்
இன்றும்... இங்கும்!"

இலங்கையிலும், இங்ஙனமாக எங்கெங்கெல்லாம் நீதிகள் தடை செய்யப்பட்டவிடத்திலும் நிமிர்வோம். நியாயங்களை நிசப்படுத்த, காயங்களையும் ஏற்போம்.

'உள்மை' - யில்

உள்ள உண்மைகள் கசக்கலாம். மருந்துகளும் கசக்கும். கசப்பு நிறைந்த இன்றைய தினங்கள் விரைவில் காலாவதியாகட்டும்! இதமான நாளைய தினங்கள் பிறப்பெடுக்கட்டும் - துரிதமாக...!

இதற்கான இலட்சியத் தோழமையில்,

ஜெரி

தானம்

136, சாந்தோம் நெடுஞ்சாலை

சென்னை - 600 028.

## தட்டிக் கொடுத்த...

இலங்கை இயேசு சபை மாநில முதல்வர்
பணி. **செ. மரிய அந்தோணி**, சே.ச

பேராசிரிய நண்பர் **அமைதி அரசு**

பெர்க்மான்ஸ் இல்ல மேலாளர்
பணி, **டெனிஸ் பொன்னையா,** சே.ச.

தோழர் **ஜெரி**

அண்ணன் கவிஞர் **அறிவுமதி**

ஓவியர் **சந்துரு**

நண்பன் **நடராஜ்**

வைகறை வட்ட பணி, **ஜோ. அன்ரனி**, சே.ச.

பணி, **சிரில்,** சே.ச.

தோழமையில் **ஸ்ரீதரன்**

நண்பர்களுக்கு...
நீங்களும்...

உரிமையுடன்
நன்றி!

எழில்


**பெர்க்மான்ஸ் இல்லம்**
இலயோலா கல்லூரி, சென்னை - 600 034
மின்னஞ்சல் : elil@gawab.com
தொலைபேசி: 0091-44-28178256/28178257


விடுதலை விதை

துளிர்வதற்காய்

உரமாகிப் போன

என்

நண்பர்களுக்கு...




# கவிதைகள் அல்ல

இங்கு
கிறுக்கப்பட்டவை
கவிதைகள்
அல்ல
உள்ளக் குமுறல்கள்

காயம்பட்ட
உணர்வுகள்
வரி வடிவ
கருப்பைக்குள்
தங்க முயற்சிக்கின்றன

கற்பனை சுமந்த
மூட்டைகள் அல்ல
வரலாற்றுப் புருஷிகளுக்குச்
சொந்தமானவை இந்த மழலைகள்
அனுபவங்களின் பெற்றோருக்குப்
பிறந்தவை
மனிதப் படியாக்கம் (cloning)
அல்ல
□



# விடுதலைக்கான விலை


கைது
கைதி
பிறந்த மேனியுடன்
முகமூடிகளற்று
என்னைப் பார்க்கின்றேன்

எஸ்லோன் குழாய்
புட்டத்தின் மௌன அலறல்
மேசை லாச்சியினுள் ஆணுறுப்பு
நித்தியத்திற்குமான நிசப்தம்

நினைத்தேன்
சிரிப்பொலி...
விழித்தேன்
நகக் கண்களுக்குள்
ஊசிகள்
புதிய அக்குபஞ்சர்

மின்னழுத்திப் பெட்டி
அடையாள மறைப்பிற்கு
திரும்பிப் பார்த்தேன்
வதை கூடம் நாணிக் கொண்டது
நான் கொடுத்த விடுதலைக்கான
விலையை எண்ணி

□



# புலம் பெயர்வு


பிறந்த மண்
அந்நியமானது
மனக்குமுறல்கள்
குண்டு வெடித்த ஓசையாய்

சொந்தங்கள்
நினைவுகளில் மட்டும்
பசுமையாய்

கனவில்
தூக்கம்
விழிக்கிறேன்

யாரோ
என்
தாய் மண்ணை
வன்புணர
முயல்வதாய்


அகதி – என்ற
அடையாளத்தில்
இயந்திரத்தில்
சக்கையாய்
மறுநாள்
விடியும் என்ற
எதிர்பார்ப்புடன்...



# கிளாலி


நான்
வெறித்தபோது
வெறுக்கின்றேன்
அணைக்கின்றேன்
என்
ரத்தங்களின்
ரத்தத்திற்காய்
மழையாய் குண்டுகள்
தண்ணீரில் துவாரங்கள்
சாவின் ஸ்பரிசத்திற்குள்
கடக்க முனைந்தவர்கள்
கடலின் அடியில் உறங்கும்
இந்த எச்சங்களை
திரையிட யாருமில்லையே
ஒரு நாள்
நிழலாய் அல்ல
நிஜமாய்
வரலாற்றின் கச்சைகளை
வரிந்து கட்டிக்கொண்டு
உரிமைக்கான ஆக்கிரமிப்பு
☐

* கிளாலிக் கடனீரேரி வன்னிக்கும் யாழ் மண்ணிற்குமான போக்குவரத்துப் பாதையாக விளங்கியது.



# முட்கம்பி வேலி

என் தேசத்தினுள்
புதிய இறக்குமதி
மக்களை
தீவிரவாதிகளிடமிருந்து
காக்க...
எங்களது பிள்ளைகள்
எங்களுக்கு
தீவிரவாதிகளாம்
நெஞ்சத்தைக்
குத்திக் கிழிக்கின்றன
சொந்த வீட்டிலேயே
கைதியாய்
உணர்கின்றோம்
வீட்டு முற்றத்து
கடற்கரை மணலை
அள்ளி விளையாட
தடுக்கிறது – முட்கம்பி
ஆனால்
பார்வைகள் ஏனோ
முட்கம்பிகளுக்கூடாக
தூரத்தே முகிழும்
சூரிய உதயத்தை
நோக்கி...
❑




# குமுதினி

பிள்ளைகளைச்
சுமந்த
பயணிப்பு
நீலச் சட்டையரின்
வீதி மறிப்பு
நுரையின்
ரத்தக் கொப்பளிப்பு
கடலலைகள் மௌனித்தன
கரையை எதிர்நோக்கியவர்

நிரந்தரமாய்...
கத்தியும்
கோடரியும்
மிதந்து வந்து
செய்தி சொல்லின
அஞ்சலி
போர் முரசம்
சோகங்களைக் களைந்து
அணிவகுப்பு
இன்னொரு
குமுதினி
சாகாமலிருக்க
□

* குமுதினிப் படகில் பயணஞ் செய்தவர்கள் படுகொலை செய்யப்பட்டதன் நினைவாக.



# ஏதிலி

ஏதிலிப் பயணம்
தனிமைக்
காட்டுக்குள்


சுக்கு நூறாய்
வெடித்த
உறவுகள்

அதிர்வின்
விசிறலில்

திசைக்கொன்றான
தொப்பூழ் கொடிகள்

நாகரிக
வெறுமைக்குள்
' சுயம் '
இழந்தவர்கள்

முகமூடிக்
குப்பைக்குள்
இன்னும்
தேடுகிறார்கள்
' தங்களை '



# உருக்குலைந்த தாய்மண்

அண்ணாந்து பார்த்து
விடைபெற்றுக்கொண்டேன்
கட்டடச்
சொந்தங்களிடமிருந்து
மீண்டு...
கற்குவியலுக்குள்
பெயர்ப் பலகைகளைத்
தேடுகிறேன்
குண்டுகளால் உழப்பட்டு
கண்ணிகள்
விதைக்கப்பட்டிருந்தன
சுடுகாட்டுப் பேரிரைச்சல்
வீட்டின் அத்திவாரத்தைக்
காக்கும்
நன்றியுள்ளவை
அங்கலாய்ப்பு
விவசாயி
மறுத்து
உழுதான்
விடுதலைக்கான
பூகம்பம்
▯




## வன வாசம்

வனாந்தரக் காடுகளின்
தனிமை இரவுகள்
இனம் புரியா வெறுமை
புறத்திலும்!
வாழ்க்கை எரிச்சலில்
கட்டிய கோவணம்
நாறுகிறது.
சூம்பிப் போன
கொங்கைகள்,
கூரையில்
தொங்கி
நின்றது பார்வை,
மரங்கள்
சூரியனுக்குப்
பிரியாவிடை,
பார்வை
மழுங்குகின்றது
கும்மிருட்டில்
கறுப்புப் பூனை
இன்னமும் விடியாத
பொழுதுகளில்
படிமவியலில்
புதிய அத்தியாயம்
□



# தீவிர...

ஏதுமறியாதவர்
சாதாரணர்
' பயங்கரவாதி '
வாயு உலைக்குள்
உள்வாங்கப்பட்ட
இன்னுமொரு யூத இனம்
' தமிழன் '
இதற்காய் வஞ்சிக்கப்பட்டவர்
தனித்துவங்கள் களவாடப்பட்டது
வயல்வெளிகள் வரவேற்றன
' மனித ' ச் சக்கைகளை
உரமாக,
காணாமல் போனோர்
பட்டியலில் தமது
இருப்பை உறுதிப்படுத்தினர்.
உறுதிப்படுத்தப்படாத
சாவின் கல்லறைகள்
நிரவப்பட்டன
பிரேதங்களின்றி,
இல்லாமையில்
இருந்து
உயிர்ப்பார்கள்
என்ற நம்பிக்கையுடன்




அகதி தஞ்சம்

அவதிக் கரைசேரல்
கரையோரம் தபாற்கந்தோர்
மனிதத் தபால்கள்
' தீவிரவாதி ' முத்திரை
அனுப்பலாம்!...
சுயம் தொலைத்து
முகாமிற்கு
திறந்த சிறைச்சாலை

" விடுங்கடா
என்ர மண்ணில்
நான் சாக...."


அந்நிய
புதைகுழிப்
பயணம்

தாகங்கள்
விழித்திருப்பு
இன்னொரு கருக்கட்டலுக்காய்
□




## வறுமை ஆசான்

எல்லோரும்
இகழும்
வறுமையே
நான்
உன்னைப்
புகழ்கிறேன்
ஏனெனில்
எனக்கு
வாழ்க்கையை
வாழக்
கற்றுக்கொடுத்த
ஆசான்
மனிதத்தை
மதிக்கக்
கற்றுத் தந்தவன்
வெறுங்கால்களில்
ஒட்டிப் போயுள்ள
புனிதத்தைச்
சொல்லித் தந்தவன்
□




## நிற்க!

குருமடங்களே
நிறுத்துங்கள்
உங்கள் இயந்திரப்
பிரசவங்களை
போதும்
உங்கள்
ரோபோக் குழந்தைகள்
புதிய நூற்றாண்டில்
உங்கள் கருவறைகள்
இதயமுள்ள
புரட்சியாளர்களைப்
பிரசவிக்கட்டும்
அப்போது
அவர்கள்
சப்பாத்துக்களை
அல்ல
வெறுங்கால்களை
மதிக்கக்
கற்றுக்கொள்வார்கள்



## எங்கள் கடல்


எங்கள்
கடற்காற்று
உப்பைச்
சுமந்து வருவதில்லை
கடலில்
காவியமான
எங்கள்
பிஞ்சுகளின்
இரத்த வாடையையும்
அவர்களின்
விடுதலைக்கான
தாகத்தையும்
சுமந்து வருகிறது
□



# போர்!


நீ அனுமதிக்கப்பட்ட
இருப்புக்கோல்
உனது கொடுக்கின் கீழ்
எங்களது விழுமியங்கள்
மீள் பரிசீலனை
செய்யப்பட்டன.
பூட்டியதால்
திறக்கக்
கற்றுக்கொண்டோம்.
புதைத்ததால்
உயிர்ப்பிக்கக்
கற்றுக்கொண்டோம்.
சாகடித்ததால்
வாழக் கற்றுக்கொண்டோம்.
உன்னால்
எங்கள் சிந்தனைகள்
தோலுரித்துக் கொண்டது.
நீரோட்டத்தின்
திருப்புமுனைகள்
உனக்குரியவை

□



## கடலும் - கலாச்சார அழிவும்

கவிஞர்கள்...
கரையில் நின்று
கடலைப் பார்த்து
அழகை ரசித்து
கவிதை படைத்தது
நேற்று
நான்
கடலில் நின்று
கரையைப் பார்த்து
உதட்டுக்குள்ளும்
கவட்டுக்குள்ளும்
முத்தெடுக்க முனையும்
மேலைத்தேய
கலாச்சார கடன் வாங்கலுக்குள்
எங்கள் கலாச்சாரப்
புனிதங்களை
தொலைத்துவிட்டவர்க்காய்
அழுகின்றேன்
கடற்கரைகளே
கலாச்சார சீரழிப்பில்
நீங்கள் - தான்
முதன்மைப்
பாத்திரம் ஏற்றீர்கள்



## முகாரிக்குள்ளும்...

போர் மேகங்களே
உங்கள் கூடலில்
பிரசவித்ததுதான்
குண்டு மழை
பிரசவத்தின் இரத்த வெள்ளம்
எங்கள்
இளம் தாய்மார்களின்
தாலியைப் பறித்தெடுத்தது
பிள்ளைகளின்
கன்னிமையை
காவு கொண்டது
இளைஞர்களின்
உயிருக்கு
நிர்மூல தரிசனம்
வழியில் அகப்பட்டதை
வாரிக்கொண்டது - அதன்
நெடிய நாற்றம்
எம் மண்ணைவிட்டு
இன்னும் அகலவில்லை.
இருந்தும்
பிணக்காட்டுக்குள்ளும்
புது அரும்புகள்




## தங்கை - கிரிஷாந்தி

தங்கை கிரிஷாந்தி
உன்னை
பூஜித்து வணங்குகின்றேன்
நீ
எரிமலைக் குழம்பு
பூ மலருமுன்
மென்மை
உடற்பசிக்
காமுகக் கழுகுகளால்
குதறப்பட்டது
உனது
கோர மரணம்
புதைக்கப்பட்ட
வன்புணர்வுகளை
உயிர்ப்பித்தது
மலினப்பட்ட
நீதியைத் தட்டியெழுப்பியது
நீதியமைச்சு
மீன் தூக்கத்தில்
நீதி விழிக்கும் போது
நீதிபதிகள்
குற்றவாளிக் கூண்டில்
□




## மூடு வாயை

அம்னெஸ்தியே
மூடு வாயை
சிறார்களை
புலி (புது) வீரர்களாக்குவதுதானோ
உனது சட்டத்தில் எழுதிய குற்றம்
என் தங்கைகளின்
கன்னிமையைக் கயவர்கள்
சூறையாடிய - போதும்
தம்பிமார்கள் வீதி வழியே
இழுத்து வரப்படும் போதும்
அம்மாக்களின் நிர்வாணம்
ரசிக்கப்படும் போதும்
அண்ணன்மார்களின் உடல்கள்
வதைகூடங்களில் கருவாடாக காயும்போதும்...
போதும்
நீலிக்கண்ணீர்
நீ நீதிக்காகப் போராடவில்லை
உனது அமைப்பின் பெயரை
இருப்பையும் தக்கவைப்பதற்காய்
போராடுகிறாய்



# நிறுத்துக - ஒரு நிமிடம்

யாழ் மண்ணை நோக்கிப்
படையெடுக்கும்
கண்காட்சிப்
பார்வையாளர்களே
நிறுத்துக...
இது வீரம் விளையும்
கர்ப்பப்பீடம்
விடுதலை வேள்வியில்
ஆகுதியான
வீரர்களின்
இரத்தம் பட்டு
சிவந்து - போன
மண்:
உங்கள் அழுக்குப்
பாதங்கள் பதிக்க
இது துடைப்பமல்ல
மக்கள்:
கண்காட்சிக்கு வைக்கப்பட்ட
சடங்களுமல்ல
இவர்கள்
போர்ச் சூளையிலே
புடமிடப்பட்ட பீனிசுக்கள்
வீர வரலாற்றின் பக்கங்களைச்
சுமந்து நிற்கும்
வரலாற்றாசிரியர்கள்



# உண்மைத் திருப்பிகள்

யாழ் மக்களின்
விருந்தோம்பலுக்குப்
புகழாரம் பாடும்
பத்திரிகை
விற்பன்னர்களே
(யாழ்) மக்கள்
புலிகள் - அல்ல
பசுக்களாமே
பசுக்களுக்குப்
புலித்தோல்
போர்த்தியது
நீங்கள்
என்பதை
மறவாதீர்கள்
நீதிக்கும்
உண்மைக்கும்
குரல் கொடுக்கவேண்டிய
பத்திரிகா தர்மத்தை
குழிதோண்டிப்
புதைத்த - புதைக்கப்
படித்த
ஊனப்பட்ட
இனம்




# புண்பட்ட மண்

புண்பட்ட
யாழ் மண்ணே
நீ
' டிஸ்னி ' உலகமாய்
மாறியதெப்போ
அந்நிய
மருத்துவிச்சிகள்
உன்
நிலை கண்டு
படையெடுக்கிறார்களாமே
உண்மை தானா?
காயப்படுத்தியவர்கள்
காயத்திற்குக்
கட்டுப் போடுகிறார்கள்
வடுக்கள்
ஆறும்போது
நீ
புது மனுஷியுமல்ல
உனது பிளாஸ்ரிக்
அறுவைச் சிகிச்சைக்குள்
எங்கள் கலாச்சாரம்
செத்துவிடக் கூடாது
□



# செஞ்சோற்றுக் கடன்

தமிழீழ மண்
சுமந்த
பனைகளே
தென்னைகளே
நீங்கள்
கர்ணன்
வழித்தோன்றல்கள்
இனச் சுத்திகரிப்புப்
போர்த் – தடுப்பில்
முக்கிய பாத்திரம்
ஏற்றீர்கள்
தமிழின அழிப்பு
முடுக்கிவிடப்பட்டபோது
'ஷெல்' தடுக்கிகளானீர்கள்
தமிழனை வேரோடு
பிடுங்க முற்பட்டபோது
வேரோடு சாய்ந்து
தமிழ் இருப்பைக்
காத்தீர்கள்
உங்களை
ஆகுதியாக்கி
செஞ்சோற்றுக் கடன்
தீர்த்தீர்கள்



# சமாதான பீனிசுக்கள்

புறாக்களே, புறாக்களே
நாங்கள் தூது செல்ல அனுப்பிய
சமாதானப் புறாக்களே
நீங்கள் நோவாவின் காகங்களாகி
தொலைந்து போனீர்களா?
தொலைக்கப்பட்டீர்களா?
கசாப்புக் கடைக்கு
விலை பேசப்பட்டாயாமே – உன்
இரத்தம் என்ன நிறம் – என்று
பார்க்க – உனது
மாமிசம் மிக ருசியாமே
புசித்தவர்கள் பகர்கிறார்கள்
நீ துகிலுரியப் பட்டாயாமே – உன்
மானத்தையும் விலைபேச:
நீங்கள் அட்சய பாத்திரத்திலிருந்து
புறப்பட்ட தியாகிகள்
விடுதலை விரும்பிகள்
உங்களின் விழுதல்கள்
பின்னிருட்டில் ஏற்படப் போகும்
விடியலிற்கான எதிர்வுகூறல்கள்
உங்கள் தியாக மரணங்கள்
தோல்வியுறும்போது
நீங்கள் பீனிசுப் பெலிக்கான்களாகி
உரிமைகளுக்காய் ஓங்கி ஒலிக்கும்
சம்மட்டிகளாவீர்கள் என்பது
வெள்ளிடை மலை
இதுவே எதிர்காலத்தின்
யதார்த்தம்

□
Phoenix – பீனீசு



# அவள்


வெறித்துப் பார்த்தாள்
எதிர்காலத்தை,
தொழிலுக்குப் போன
அப்பா கடலில்...

கண்முன்னே
அம்மா
முடிவிலி உறக்கம்

வீரச்சாவு – செய்தி
தம்பி


இவள் மட்டும்
தனியள்,
இருட்டு,
புதுசாய் மாட்டியிருந்த
ஜெய்ப்பூர் கால்
வலிதாங்க முடியாது
நிமிர்ந்தாள்
சூனியம் சுருங்கியது
மேகத்தில்
விடிவெள்ளி
சிரித்தது

* ஜெய்ப்பூர் கால் – செயற்கைக் கால்



ஈழ மங்கை

அவள் அலறலில்
கல்லறை நிசப்தம்
இன்னும்
அறுந்து போகாத
தொப்பூழ் கொடி
உறவு பக்கத்தில்
வெறுமை
இயலாமை
கூட்டத்தில்
தனிமை
பேதைமை;
அவளைக் கேட்காமலே
இருள்கின்ற வானம்,
போராட்டம்;
வாழை இலையாய்
கிழிந்துபோன
மிதிவெடிக்குள்
அகப்பட்ட
காலுடன் அல்ல,
விரிய மறுக்கும்
எதிர்கால மொட்டுடன்...
யாரோ
தீக்குச்சி உரசுகின்ற
சத்தம் கேட்கின்றது
□



# இது


ஒரு கல்லறை தேசம்
வீட்டு முற்றங்கள்
கல்லறைக் காடுகளாயின
அவசர புதையலில்

வயல் வெளிகளில்
குருதி வெள்ளம்

மூக்கு
தன்னை ஆசுவாசப்படுத்திக்
கொண்டது
சுடுகாட்டு
நறுமணத்திற்கு

தெருவெங்கும்
மலிந்து போன
மரணங்கள்

இது
விடுதலை விதைகளால்
விதைக்கப்பட்ட
கல்லறைப் பூமி
□




## செம்மணி

தமிழீழ அவுஸ்விட்ச்
இன்னும்
மௌனம் கலையாமல்
பாலியல் கேஸ் சேம்பரில்
இருந்து தப்பித்து
ஓய்வெடுப்பு

மரண நித்திரையிலும்
ஆட்சேர்ப்பு

என்றோ
ஒரு நாள்
உண்மைக் குழந்தையைப்
பெற்றெடுக்க
□

* செம்மணியில் 600 தமிழர்கள்
கொன்று புதைக்கப்பட்டார்கள்



## மாவீரர்கள்

மரணத்திற்குக்
கல்லறை கட்டி,


விடுதலைக்கான
விழுதல்கள்
புதிய நாற்றுகளை
பிரசவிக்கும்
கட்டியம்கூறி,

சுயங்களை
சுயம்வரங்களை
ஆகுதியாக்கி
விடுதலை யாகம்
வளர்க்கத் தீயானவர்கள்.

சுதந்திர தமிழீழத்தைச்
செதுக்கிய சிற்பிகள்.


தலைவணங்குகின்றோம்!

இலட்சியங்கள்
வெல்லப்படும் வரை
□




# கைதும் கையறுப்பும்

சந்தேகத்தின் பேரில்
கைது
தமிழிச்சி
குறிப்பறிந்து நிர்வாணமானாள்
கத்தரிக்கோலின் வாய்க்குள்
கொங்கைக் காம்புகள்
தாய்ப்பால் குடித்தவர்களுக்கு
ஞாபக மறதி
நாராய் கிழிந்து
தொங்கும் கொங்கைகள்
யோனியின் அலறல்
வரிசையாய் ஆமிகளின்
கையில் ஆணுறுப்பு சிரித்தது
இறக்க மறுத்தாள்
மரணத்தின் கோரப் பற்கள்
பின்வாங்கியது
மீண்டும்
கன்னிமையுடன்
புயலாக
நீதியின் மனச்சான்றை
உயிர்ப்பிக்க...
□



## நாகர்கோவிலில்


80 பிஞ்சுகள்
பஞ்சாய்ப் பறந்தார்கள்
போரின் அனர்த்தம்
மனக்கோட்டைகள்
கண்ணி வெடிக்குள்
வாழ்க்கை
வீட்டின்
கிரகப் பிரவேசத்தின்
முன்
இடுகாட்டின்
வெற்றிலைத் தானம்
வரவேற்றது
ஓங்கி அறையுங்கள்
UNOவின்
செவிப்பறைகளை
உயிரற்ற மரங்களுக்கு
உணர்வு வரும்
இதுவும்
சிறுவர்
உரிமை மீறல்
□



# நவாலி 1995-7-9

அமைதியான அதிகாலை வானம்
குண்டு வீச்சுக் கூவலில்
விடியல்
துப்பாக்கி ரவைகள்
கொக்கரித்தன
மரணத்திற்கான ஆயத்தம்
இரு யமக் கழுகுகள்
600 கிலோ ரி என் ரி யுடன்
இரை தேடி ஆகாயத்தில்
எப்போதும் போல்
வாழ்க்கையோடு
ஒன்றாகிப் போன
இடப்பெயர்வு
பாதுகாப்புத் தேடி
ஆலயம் பங்கருக்குள்
' குத்திறான்
குத்திட்டான்'
அங்கலாய்ப்பு
தீப்பிழம்பு - மின்னலோ?
மரண ஓலம்

பெருஞ் சத்தத்தின்
நிசப்தம்
முனகல்கள்
சில வினாடிகளில்
புதிய சுடுகாடு
இலங்கை அரசின்
கண்டுபிடிப்பு.
உறவுகளைத் தேடி படையெடுப்பு
அழுவதற்கு யாருமில்லை
மனிதச் சதைகள்
வெளவால்களாக மரங்களில்
மண் தன்னுடைய
கடமையை முடித்திருந்தது
இரத்தத்தை உறிஞ்சி
வெற்றுச் சாக்குகள்
வரவழைக்கப்பட்டன
ஒரே சாக்கினுள்
பல சிதிலங்கள்
சில சாக்குகளைச் சுமந்து
மௌன ஊர்வலம்
பல பெயர்கள் பட்டியலில்
மீண்டும் இரை தேடி
வருமுன் இறுதிக்கடன்
மறுநாள் பத்திரிகை
“ நவாலிக் குண்டு வீச்சில்
150க்கு மேற்பட்டோர்... ”
சமாதிகளுக்கப்பால்
சகோதர இழப்புக்களைத் தாண்டி
நம்பிக்கை விளக்குகளைக்
கையிலேந்தி
விடாத பயணம்
விடுதலைக்கான யாகம்



# பொருளாதாரத் தடை


பொருளுக்குத்
தடை

எரிபொருள்
மருந்து
காகிதாதி...
பட்டியலின் நீளம்
பெருந் தெருவாய்

விதிக்கப்பட்ட
வாழ்வியலுக்கான
தடை

கந்தக
வெக்கையில்
வேகா உடலங்கள்

இதில் மட்டுமா...
□




# எரிகணை

கும்.....
ம்......
பொம்..........

இயற்பியல்
தோற்றது

முழு மனித
அணுவைப்
பிளந்தது
சுக்கு நூறாய்
அணுப் பிரிப்பு
கற்கை நெறிக்கு

பிரிந்ததை
இணைக்கும்
புது ‘ இயல் ’
யாதோ
□



# அகதி

தமிழன் + அகதி முத்திரை

83களின் பின்னதான
புதிய தாலிகட்டு


விவாகரத்து விரும்பியும்
கிடைக்காத இல்லறம்

நீதிமன்றுகள் மாறி
தொடரும்
வழக்குத் தாக்கல்கள்

இறுதிக் கணம்
வரைக்கும்


காத்திருப்பு
எதிர்பார்த்திருப்பு

முடிச்சவிழ்க்க
□



## புரட்சிப் பக்கம்

அக்கா
'மென்மை'
களைந்தெறியப்பட்டது
வரலாறு
திருப்பப்பட்டது
மென்மையல்ல
பதுமையல்ல
உரங்கொண்டெழும்
சுவாலை
விடுதலை
விடம் குடித்து
விஷமூட்டினாள்
தணல்ப் பிழம்பு
பொசுங்கியது
ஒவ்வாமை
பெண்ணியம்
கனவியல் கோட்பாடல்ல



# எலும்புகள்

உடைக்கப்பட்டவை
உருக்குலைக்கப்பட்டவை
சிதைக்கப்பட்டவை
உருமாற்றப்பட்டவை
சாகடிக்கப்பட்டவை
அந்நியமாக்கப்பட்டவை
பெயர்க்கப்பட்டவை
அழிக்கப்பட்டவை
மறுக்கப்பட்டவை
இழக்கவைக்கப்பட்டவை
தொலைக்கப்பட்டவை
புதைக்கப்பட்டவை
மௌனமாக்கப்பட்டவை
நசுக்கப்பட்டவை........

வெந்த மண்ணில்


எசேக்கியலின்
எலும்புகளுக்கான.......
ஜெஸ்ஸேயின் துளிர்...



## பரா


நிலாப்
பார்த்து
எங்கள்
சிசுக்களுக்கு
அன்னம்
ஊட்டிய
காலம்
மலையேறி
இப்போது
பராப்
பார்த்து
எங்கள்
சிசுக்களுக்கு
வீரம்
ஊட்டுகின்றோம்

* பரா வெளிச்சம் கள முனைகளில் எதிரியை அடையாளம் காண்பதற்கு பயன்படுத்தப்படுவது.



## பச்சை

எனது வாழ்வியலில்
மறைப் பரிமாணம்
பெற்றது
நான்
விரும்புகிறேன்
ஆக்கிரமிப்புகளைச்
சுட்டெரிக்கும்
எரிமலைகள்
அள்ளி வீசும்
' லாவா ' க்களின்
சிவப்பை
□




## பிச்சைக்காரர்கள்

நகரங்களில்
நடைபயணிகளின்
கண்ணை உறுத்தா
தெய்வப் பிறவிகள்
மனித(ம்) விழுமியங்கள்
செத்துவிட்டதா
எனப் பரிசோதிக்க
கையேந்துகிறார்கள்




# எச்சங்கள்

..... குப்பைமேட்டில்
நாய்க்கும்
மனிதனுக்கும்
மிச்சத்திற்கான போராட்டம்
பணமுதலைகளின்
சொச்சங்களில்
ஒட்டிய வயிறு நிரப்பக்
காத்திருக்கும்
அஃறிணைக்கும்
அஃறிணையாக்கப்பட்டதுக்குமான
யுத்தம்
தொழிநுட்ப அரக்கனுடன்
போர்தொடுத்த
நலிவுற்றவனின் குமுறல்
உதவியற்று
உதிரிகளாய்ப் - போன
சொச்சங்களின் மிச்சங்கள்
மனிதத்திற்கு
புதுப் பரிமாணம்
கொடுக்க முயலும்
எச்சங்கள்
□




# மதக் கடல்

எங்களைச்
சுற்றியுள்ள
கடல்களே
எங்கள்
மக்களை
ஏன்
விழுங்கினீர்கள்
சிங்களப்
பேரினவாத
மதம்
உங்களுக்கும்
ஊட்டப்பட்டுவிட்டதா?
தமிழின
அழிப்பிற்கு
நீங்களும்...



# சமாதானம்

வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட
சமாதானம்(ம்)த்திற்கு
தற்போது ஆயுள் தண்டனையுடன்
கடுங்காவல் தண்டனை
சிறைப்பிடிக்கப்பட்ட
சமாதானத்தைப் – பற்றிக்
கதைப்போரும்
சிறைப்பிடிக்கப்படுகின்றனர்
சிறைக்குள் இருக்கும்
சமாதானத்தைப் பார்க்கச்
செல்வோரும் சிறைபிடிக்கப்படுகின்றனர்
ஒட்டு மொத்தத்தில்
சமாதான விரும்பிகளும்
சமாதானத்தின் உறவினர்களும்
மௌனிகளாக்கப்பட்டு
புதைக்கப்பட்டு விட்டனர்
வன்முறைப் பரபாசு
விடுவிக்கப்பட்டான்
ஒரு
சமாதானத்தின்
கொலைக்காக
□




# எங்கே?

நாங்கள்
இன்னும்
புழுக்களாகவே
மனிதத் தோலின்
போர்வைக்குள்

எல்லாமே மறுக்கப்பட்டதால்
மறந்துபோனது
மனிதச் சுயம்

தேடல் பயணிப்பில்
செயலற்று,
பொருளற்றுப்போன
முயற்சிகள்

ஆனாலும்
இன்னும்
தேடிக் கொண்டிருக்கிறோம்...




## Tamilar - டமிலர்

ஆ . . .
நீங்கள் தமிழரா
இல்லை டெமிலர்
உங்களுக்குத்
தமிழ் தெரியுமா
டெமில் தெரியும்
ஆமா
நீங்கள் யாழ்ப்பாணமா
இல்லை யப்னா

இங்லிஷ்ஸ்ட்
தமிழ்

தமிழ் மணம்
புதைக்க
ஆங்கில
செண்ட்
அடிக்கிறார்கள்
▯




## இப்படியான அமைப்புகள் எதற்கு?

அமைப்புக்களின்
நிர்வாண
இருப்பை
உறுதிப்படுத்த
அமைப்புக்கள்

உடைத்தெறியுங்கள்.......


அதிகாரப் பிசாசுகள்
குவிக்கப்பட்டு
லஞ்ச லத்தியிலும்
அநீதி மூத்திரத்திலும்
குளிர் காயும்
மனித மலகூடங்களை

□



## காவலாளி


குரைப்பு
உரைப்பு
பிள்ளை
பிடிகாரன்
தமிழ்ச்
சுயத்தை
மறைத்தன
கட்டியம்
ஓட்டம்
தேட்டம்
வாலிப
வட்டம்
பற்றைகள்:
எப்போ முடியும்
முட்களின்
உரசல்கள்
▯



## ஜூலை '83

கரு
கதை
உருவாக்கம்
பின்னணிப்
பாடல்
குரல்
ஒப்பனை
ஒத்திகை
இயக்கம்...

இலங்கை அரசு




# நினைவழியா ஜூலை

டயர்
தீயின்
உதட்டு
முத்தம்

புகை
நாக்கின்
கறுப்பு
வெளியேற்றம்
வீதி
தோறும்
வெளிச்சங்கள்

இன்னும்
நீரோ
பிடில்
வாசிக்கின்றான்



# படுகொலைகள்

**வேள்வி**

நரபலி
தர்மம்
போதித்த
புத்தனுக்கு,
பந்துகளாய்
உருளும்
சிரசுகள்
தாய்
தந்தை
பிள்ளை
முன்
பிண்டத்தின்
ஊசலாட்டம்
இரத்தக் குளியல்
வெற்றிக் களிப்பு
குண்டர்களுக்குப்
புரியுமா?
நிழல்கள்
புணர்ந்து
நிஜங்களை
பிரசவிக்கும்
▯



## கடப்பு

இருட்டுச்
சாமம்

படகேறல்


ஏக்கம்
அங்கலாய்ப்பு
மனப்பாரம்

மணற்பிட்டி
இறக்கம்
ஏமாற்றம்

அலையெடுக்கிறது


வீறிட்ட
குரல்கள்

“பனையால்
விழுந்தவனை...



## விடியல்

பச்சைச்
சேவலின்
துப்பாக்கிக்
கூவல்
நானாக
உயிரோடு,
இருப்பு
மீண்டும்
உறுதிப்படுத்தப்பட,
அடுத்த கண
இருப்பு
"நான்
சிந்திக்கிறேன்
அதனால்
இருக்கிறேன்"
அல்ல
"நான்
நானாக இல்லை
அதனால் இருக்கிறேன்"



# PTA போர்வையில் காணாமல் போன உறவுகளுக்காய்...


தமிழ் வேரறுக்க
அரசு அம்மையார் பெத்தெடுத்த
அவசரக் குழந்தை
காணாமல் ஆக்கப்பட்டவர் பட்டியல்
வயது, பால் வேறுபாடுகளற்ற
மார்க்சின் வகுப்பில்லா
சமுதாயம்.

நிச்சயிக்கப்படாத
சாவின் தழுவல்,
மூர்ச்சையற்றுப்போன
உறவுகள்
சமாதிகளற்ற
எங்கள் கைகட்டிய
வணக்கங்கள்
கூட்டங்கள்
விரதங்கள்
உண்மை சுடும்
□




## தேடுதல்

சட்டங்கள் ஊமையாக
நீதிமன்றச் சிலை
இப்போதும்
கண்கட்டியே
பாராளுமன்றப்
படியேறா
பயங்கரம்
அரங்கேறுகிறது
காதுகளை
செவிடாக்கிக்
கொண்ட
அதிகாரங்களும்
அதிகாரிகளும்
ரண களம்
உதவியற்ற,
இருள் கவ்வுகிறது
துப்பாக்கிக் கரம்
இறுகுகின்றது
தீப்பொறிக்காய்
❑




## சனமே பேசு

பிணக்குவியல்கள் எங்கும்
மலிந்துபோன சரக்கு.
நலிந்து போன மனிதர்களின்
விடைகாணா மனிதத்தின் கேள்வியில்
முற்றுப்புள்ளியற்றுப் போன
கருத்தியல்கள், மதம்,
சமூக அமைப்புக்கள்,
கட்டவிழ்ப்பு
எல்லாமே
தோற்றுப் போய்
பின்வாங்கல்கள்
மௌனித்துப்போன
சதைப் பிண்டத்திற்குள்
மனிதம் புதைக்கப்பட்டுவிட்டது
மனிதத்தின் உயிர்ப்பு இன்னுமே...
பரிணாம
விடை தேடல்
அறுந்து போகாத
நம்பிக்கை
நூலிழையுடன்
□




# மனிதத்திற்கான

போராட்டத்தில்
மரணம்
நிச்சயமானது.
ஆதிப் பெற்றோர்
தொடர்ச்சியிலெழுந்த
மனிதர்களின் கூட்டம்
நாகரிகப் போதையில்
அநாகரிகத்தை உடுத்திக்கொண்டவர்கள்
பரிணாம கால ஓட்டத்தில்
மனிதத்தைத் தொலைத்துவிட்டவர்கள்
பொய்மை வாழ்வியல் பிரசவித்த
இயற்கைக்கு எதிரான குழந்தைகள்
சாதியம், லஞ்ச அரசியல், நிற வெறி,
பொருளாதார ஏற்ற இறக்கங்கள்
இந்த குட்டிப் பிசாசுகளின்
ஒட்டுமொத்த வடிவம்
சமுதாய அவலங்கள்
இன்றும் அறுந்துபோகாத சங்கிலியாய்,
இருந்தும், சுயத்தைத் தொலைத்துவிட்ட
மனிதனின் உள் இருப்பின்
மனிதத்திற்கான ஆத்மார்த்தத் தேடல்



## இன்றும், இங்கும்... மனிதம்

இன்னும் மரணிக்கவில்லை
அதன் வேர்கள்
ஆழ்மன இருப்பில்
தண்ணீர் வேண்டி
யாகம் செய்கின்றன
அரசியல், மதம்,
கருத்தியல்கள்,
அதிகாரம், அடையாளம்...
மனிதத்தின் வளர்ப்பில்
வெறும்
தூரத்து உறவுகளே
நீயும் நானும்
இன்று
செவிலித் தாய்கள்
புறப்படுவோம்
மனிதத்தின்
கால்களை இதயங்களில்
ஆழப்பதிக்க



## சித்திரவதை முகாம்

உடல்கள்
வாய்க்குள்
அகப்பட்ட
சோற்றுப்
பருக்கை



## கணினி யுகம்

சுட்டியில் விளையாட
எத்தனித்த கைகள்
சுடுகலன் தழுவலில்
சுகம் காணும்.
'அக்ஷன் சி.டி.
எல்லாமே இங்கு
'லைவ் ஷோ
சிறிய திரைக்குள்
சுருங்குகின்றது
உலகு வாழ்க்கை போல்

'மனிதம்(ம்)
விடுதலைக்காய்
விரிகின்ற மனம்


தியாகம்

மின்னஞ்சல்
காதல்
வரம்புகளைத் தாண்டி

இறந்துபோன
காதலியின்
கல்லறையில்
சபதம் செய்கிறேன்
விடுதலைத்
தீ
வளர்க்க

எனது
மரணம்
உனது
இணையத்தில்
வெறும்
செய்தி

எனது
பிரேதம்
சுதந்திரப்
புயல்
கருக்கொள்கிறது



## விவசாயம்

வயல்வெளி

வித்துடல்
விதைத்து

உதிர
நீர்
பாய்ச்சி


இடப்பெயர்வு
உரமிட்டு

எல்லாமே
இழந்த
மருந்து
எகிறி

புன்னகை

விவசாயிகள்
தயார்

“விடுதலை”
அறுவடைக்காய்
▯




# வெலிக்கடை

மின்சார வேலி
இரும்புக்
கரங்கள்

வெளிச்சத்தைத்
தேடும்
இருள்
நிரம்பி
வழியும்
கைதிகள்

கோரப் பசி
மலங்களைப்
புசிக்கும்
வாய்கள்
மூத்திரங்கள்
தீர்க்கும்
தாகங்கள்
உரோமமே
இல்லாது
உடல்கள்
நகங்களை
வேண்டி
விரல்கள்



காடைத்தனத்தின்
கட்டவிழ்ப்பு


இரவு
நிசப்தத்தைக்
கிழிக்கும்
கதறல்

அடங்கிப்போகும்
முனகல்

காலை
சுத்திகரிப்பு

இரத்த வெடில்
அடுத்தது
நானாகலாம்
பருந்து
உயரப் பறக்கிறது
□

* வெலிக்கடை மிகப் பிரபல்யம் பெற்ற
சித்திரவதைக் கூடம்



## புதிய காதலிப்பு

வீட்டை விட்டுப்
பயணமான
'விடுதலை'
ஊதாரி மகனை,
வன்முறை
விரும்பாத மனது
சுடுகலனை
இறுகப்
பற்றிக் கொள்கிறது
கைகள்
மாற்று வழி
ஏது?

நீடூழி...
என
உறவுகள்
குண்டுகளின்
வருடல்,
ஆசை
பின் நகர
இலட்சியம்
இலக்கு நோக்கி
▯



## செம்மணி ஆய்வு

“அடுத்த வாரம்
நிபுணர்கள்
செம்மணிக்கு
வருகை”
அரசு
அறிவிப்பு
அவசர
அப்புறப்படுத்தல்
இரவு வேட்டை
சாவின் பின்னான
நிம்மதிக்
குலைப்பு
இன்னோர்
புதையல்
போலி
முகத்திரையைக் காக்க
இன்னும்
எத்தனைப்
புதையல்கள்
?



# எஃகு மனிதன்

'சோம்பேறி
பயந்தாங்கொள்ளி'
வாத்தியாரின் முறைப்பாடு

'உதவாக்கரை'
அப்பாவின் பல்லவி

எங்கு இல்லாவிட்டாலும்
நூல் நிலையத்தில் மட்டும்
கண்டிப்பாய்

பத்திரிகைக்குள்
புதையுண்டு போன
அவன் கண்கள்

"குண்டு வீச்சில்
அப்பாவி மக்கள் பலி"
"வன்புணர்வு...."
"சுட்டுக் கொலை..."

இவை
ஒரு எஃகு மனிதனை
அவனுக்குள்
உருவாக்கிக் கொண்டிருந்தன

ஒரு நாள்
வீடு திரும்பவில்லை
பெற்ற பிள்ளையாதலால்
அம்மாவின் தேடல்
முற்றுகை

அர்த்தமிழந்த
அங்கலாய்ப்பு
இருந்தும்
பெத்தது
அந்த ஒரு நாள்


ஆக்கிரமிப்பாளரின்
கடற்கலங்கள்
அழிப்பு
தற்கொடையாளிகள்

எனது...
விடுதலைக்கான
பங்களிப்பில்
திருப்தி
பெத்ததில்
மகிழ்ச்சி
▯



# அக்டோபர் 30, 1995

**யாழ்**
தேனீக் கூட்டம்
கலைந்தது
ஐந்து லட்சம்
தேனீக்கள்
முதுசத்தை
உழைப்பை
வரலாற்றுப்
பாரம்பரியங்களை
கலாச்சாரப்
புனிதங்களை
வியர்வையின்
உப்பை
ஒரே
ஒரு இரவு
ஒரே
ஒரு பாலம்
விடுதலைப்
பயணம்
▯



## புனரமைப்பு


புனரமைப்பு
அமைச்சர்
புனரமைப்புத்
திட்டங்கள்
சிந்தனைகளைப்
புனரமைப்புச்
செய்யாதவரைக்கும்

ஏட்டுச்
சுரக்காய்
கறிக்கு
உதவாது
▯




## முகவரியற்று

குண்டு
அரவணைப்பில்
முகவரியற்றுப்
போன
சொந்தங்கள்
நான்
தனிக்கட்டை
பயணம்
என் முகவரியைத்
தேடி




# ஜாம் போத்தல் விளக்கு

அறிமுகம்
போர்க்காலச்
சிக்கன விளக்கு
மருந்துக்கும் கிடையாத
மண்ணெண்ணை
நான்கு தேக்கரண்டி
மண்ணெண்ணையுடன்
வெளிச்சத்திற்கான
போராட்டம்
வரைவிலக்கணம்
மறந்துபோன மின்சாரம்
பழைய பத்திரிகைக்கு
மவுசு
விளக்குத்திரி
வெளிச்சத்திற்கு
வெளிச்சம்போட்டுப்
பார்க்க வேண்டிய
வெளிச்சம்
வாழ்க்கை
இருள்மையுடனான...
புதிய
ஹிரோஷிமாவை
கட்டியெழுப்ப
▯




## மரணக் காற்று

கந்தகத்தைச்
சுமந்து
கர்ப்பிணியாகியது
இரத்தத்
தூறல்கள்
தடுப்புக்களைத்
தாண்டி
வஞ்சகமில்லாமல்
சமத்துவம்
நிலைநாட்டி
எல்லோர்
வீட்டு
அழையா
விருந்தினர்




## கடல்

அலையின்
இசைச்
சுகந்தம்
காற்றில்
தவழ்ந்து
வரும்
உப்புக்கரிப்பு
கரையுடனான
சிறுபிள்ளை
விளையாட்டு
ஸ்தம்பிதம்
சலனமற்று
மௌன அஞ்சலி
கடலில்
கரைக்கப்பட்டவர்க்காய்
வீறாப்புடன்
எழுச்சி
வீரமுழக்கம்
போதும்
அஸ்தி
▯




# நிம்மதி

**எ**க் கடைச்
சரக்கு
அதுவும்
பொருளாதாரத்
தடைப்பட்டியலில்
அலைச்சல்
நிம்மதியற்றுப்போன
நிம்மதியைத் தேடி
வெறிச்சோடிப்
போனது
மண்மட்டுமன்று...
நிரந்தர
நிம்மதி
வேண்டி



# இன்னும்

'வியாழனில்'
மனித
வாழ்விற்கான
சாத்தியக் கூறுகள்
பரிசோதனை
நாங்கள்
இன்னும்
இங்கு
மாட்டு வண்டிகளில்
சைபர் யுகத்தில்
ஒரு கற்கால
அனுபவம்
பெட்ரோல்
வாசனை மறந்த
வாகனங்கள்
புகை விழுங்கி
கறுத்துப்போன வானம்
ஓசோனில்
ஓட்டை
இல்லை
□




# புகைவண்டி

90ன் பின்
இரும்புச் சக்கர முத்தம்
மறந்துபோனது
தண்டவாளங்களுக்கு
ஓசையின்றி
வெற்றிடமான காற்று
தண்டவாளத்தின்
வாசனை மறந்த மண்
சுகமான சுமைகளைத் தாங்கி
இலவு காத்தவையான
சிலிப்பர் கட்டைகள்
புகைவண்டிக்காக இன்னும் காத்திருக்கும்
நரைத் தலைமுறை
வரைவிலக்கணம் மறந்துபோன
இளந்தலைமுறை
கற்பனையில் கண்டு சஞ்சரிக்கும்
பிஞ்சுத் தலைமுறை
ஆனால் இன்னும்
இங்கு
தீப்பெட்டிப் புகைவண்டி
நகர்ந்துகொண்டிருக்கிறது
வீடுகளில்
▯




## முதுசம்

வேப்பமரம்
இழக்க விரும்பாத
முதுசம்
பரம்பரை
சொல்ல
ஊரின்
வரலாறே
சொல்ல
ஒரே ஒரு
பழுத்த தலை
நிறை குடம்
மோனம்
கலையாமல்
நேற்று வரைக்கும்
இன்று
ஆடை கலைந்து
முடி உதிர்த்து
வேப்ப மரம்
மட்டுமா?
▯




## இரவுகள்

இனிமை
களவாடப்பட்டு
நிம்மதி
மறுக்கப்பட்டு
நிசப்தம்
தொலைத்து
'சாமத்து'
யமராசர்களை
எதிர்கொள்ள
திருவிழிப்பு
எக்கணத்தில்
எதுவும்
எழுதப்பட்டுப்போன
நியமம்
பய ரேகையின்
அத்துமீறல்
யாரிடமும்
அனுமதி பெறாமல்



# ஊரடங்குச் சட்டம்

உனது
கின்னஸ் சாதனை
கற்கால
லாம்புகள்
நவீனத்தை
எட்டிப் பார்க்க
உயிர்த்தன
கல்லான நெஞ்சங்கள்
அனுமதி மறுத்ததால்
மூர்ச்சையாகிப்போன
கர்ப்பிணிகள்
நோயாளிகள்
'இவர்கள்
பாதுகாப்புக்கு
அச்சுறுத்தலாம்'
இரவுகள்
வேண்டாம்
நிறுத்துங்கள்
சூரியனை
அஸ்தமிக்கவிடாது
▯



## செத்த வீடு

**செ**த்தது
பிணம்
அழுவது
அழுபிணம்
பார்க்க
வருவது
நடைப்பிணம்
எல்லாமே
சுய
பிணம்
நோக்கிய
நகர்வுகளும்
நகர்த்தல்களும்




'பசி'

நாங்கள்
உண்ணும்
உணவு
▯



# இராணுவக் காப்பரண்கள்

96ன் பின் வீதி தோறும்
புதிய வரவுகள்
விரும்பிய இரைகளைக்
கொத்தித் தின்னும் கழுகுகள்
பாதுகாப்புப் போர்வையில்
பரிசோதனைச் சாவடி
சுலோகம்
' மனித மறைவிடங்களில் குண்டுகள் '
வக்கிர தேடல்
எதை
யார்
கொடுத்தார்
சுதந்திரத்தை
அவன் கையில்
மறைவிடங்களில்
தகிக்கும் சூடு
அவனுக்குச் சொல்லும்
இது
விடுதலைத் தீ
கனலும் அடுப்பு



## மக்களைக் காக்க

"மக்களைக்
காக்கும்
தெய்வங்கள்...."
சனாதிபதி
தனது
உரையில்

வழமையான
பொய்

இந்திரர்களுக்கு
காப்பரண்கள்

தங்களைக்
காக்க
முடியாதவர்
எங்களை.....
என்
கைதான்
எனக்குதவி
▯



## சுற்றி வளைப்புக்கள்

**சு**ய பாதுகாப்பு - இல்லை
பிறர் பாதுகாப்பு
வதந்தி
அப்பாவிகள் விரும்பாத
பெயரெச்சச் சேர்ப்புகள்

முகமூடி வால்பிடிகளின்
உறுதிப்படுத்தல்கள்
தேடும் படலம்

'நாங்கள்
பிடிக்கவில்லை'
அசட்டல்
பதிலிறுப்பு
உறுதிப்படுத்தப்படாத
கைதும்
தொடரும் உயிரிழப்பும்
உறவுகளின்
தொடர்
உண்ணாவிரதங்கள்
உறுதிப்படுத்தப்படும்வரை



# மண்டையோட்டு அகழ்வு

**செம்மணி**

யாழ். கோட்டை
பரந்தன்
கிளிநொச்சி
மிருசுவில்
தொடரும்...



# போரியல் வியூகம்

கல்வியை
குலைப்பதெப்படி

கலாச்சார
பெருஞ்சொத்தை
அழிப்பதெப்படி

உண்மையைத்
திரிப்பதெப்படி

வாழ்விடங்களை
எரிப்பதெப்படி


பிஞ்சு
மனங்களை
திசைத் திருப்புவதெப்படி
வக்கிரங்களை
ஊட்டுவதெப்படி
எதிரியை
அழிப்பதைத் தவிர
▯



## மருத்தாயே!


நம்பி
வந்தவர்கள்
காப்பாய் – என

40 பேர்கள்
உனது
மடியில்
இரத்தக்குளத்தில்
உன்னாலும்
முடியவில்லையே



## முட்கம்பி

ஆக்கிரமப்பின்
சின்னம்
சுதந்திரக்
காற்றின்
இதயங்களைக்
குத்திக்
கிழிக்கின்றன
20000 Hz க்கு
மேற்பட்ட
உச்ச ஸ்தாயி
அலறல்
கேட்க முடியாமல்
போய்விட்டதோ
?



# குட்டை நாய்

நீ
செல்லமாய்
வளர்த்த
சடைக்குட்டி
காலை நக்கி
‘குட் டை’
என்றும் போல்

இன்று
மக்கள்
இட்ட பெயர்
‘சொறி நாய்’
‘குட்டை நாய்’

யாருக்குத் தெரியும்
உன்னுடைய
சாகும் வரையிலான
உண்ணாவிரதத்தைப் பற்றி
□



## பேசும் பாதங்கள்


உன்
பாதங்கள் நடப்பதில்லை
பேசுகின்றன

வரலாற்றுத்
தடங்களை

களப் பதிவுகளை

சமாதானத்திற்கான
தேடலை

உரிமைகளுக்கான
ஆக்கிரமிப்பை



# சுவர்

கண்ணீர் அஞ்சலிகளால்
நிறைந்துபோன
சுவர்கள்

சுவர்கள்
சுவரொட்டிகளைத்
தாங்காது
கண்ணீர் விடும்

கண்ணீரின்றி
காய்ந்துபோன
கண்கள்
அழுவதற்கு
ஒன்றா
இரண்டா...
▯



## இரும்புக் கழுகுகள்

'எச்ச(ம்)'
இறக்கம்
கிறுக்கம்
சத்தம்
மௌனம்
தரைமட்டம்

புதிய
ஏகாந்தப்
பெருவெளி

சுடுகாடு
▯



# கண்ணீர்த் துளிகள்

கண்ணீர்த் துளிகள்
கடலுடன் கலந்தன

கடல்கள்
உள் நுழைய
மறுத்தன

புதிய வரவை

கண்ணீர்க்
கடல்
அடக்கியது
சமுத்திரக்
கடலை

இவற்றிற்கு
இவ்வளவு
பலமா
?




## கல்லறை

கல்லறைகளைத்
தகர்த்தெறியுங்கள்
விதையுண்டவர்கள்
ஒரு நாள்
உயிர்ப்பார்கள்
விடுதலைப் பிஞ்சுகள்
உதிர்ந்துவிடக் கூடாது என
உரமாகியவர்கள்
விருட்சத்திற்கு
இரையானவர்கள்
அனுமதியுங்கள்
விடுதலைப்
பரணில்
மூச்சு
வாங்க




# அப்பு நீ!

ஆச்சியின் சீதனத்தோடு
வரிசைக்கிரமமாய்
பிள்ளைகள்
10 என்று
சொல்லியதோடு
'வைற் கொலர்'
வேலையோடு
திருப்தி
இன்னொரு கதிர்காமர்
பேரப் பிள்ளைகளின்
உரிமைகளை அடகு வைத்து
வாழ்வியல் சுகம்
அனுபவித்த துரோகி
உப்புக்காய் கடலை விற்று
குந்தி இருப்பதற்காய்
நிலத்தை விற்று
குண்டி துடைப்பதற்காய்
தண்ணீரை விற்று
இன்னுமென்ன
நினது
தப்பு
ஒரு சமூகம்
போராடுகிறது




# ஓட்டைகள்

குண்டுகளின்
அரக்கச்
சுகம்
கண்ணாமூச்சி
விளையாட்டு
யார்?
எது?
தப்பியது
விளையாட்டு
தோல்வி
விளைவு
விபரீதம்
இன்னும்
வடுக்கள்
காயங்களை
மட்டும்
சுமந்து
தாய் மனது




# காட்டிக் கொடுக்க

தேசத் துரோகிகள்
சுதந்திர
சதுரங்கப்
பயணிப்பில்
ஒட்டுண்ணிகள்.
இந்த
தொடர்கதையின்
புதிய
அத்தியாயங்களை
நிரப்ப
வரலாற்றில்
இன்னும்
இன்னும்
கதிர்காமர்கள்
▯



## பிறக்கட்டும்...

உடைந்துபோன
உறவுகள்
உருக்குலைந்த
முகவரிகள்
சுயங்களைத்
தொலைத்த
மனிதங்கள்
ஊமையாக்கப்பட்ட
சுதந்திரம்
புதைக்கப்பட்ட
உரிமைகள்
தொலைந்துபோன நம்பிக்கைகள்
சிறைப்பிடிக்கப்பட்ட
சமாதானம் . . .
பிறக்கட்டும்...



ஓர் இயேசு சபை இளம் துறவி
இலங்கை இயேசு சபை
மறை மாநிலத்தைச் சார்ந்தவர்
தற்போது பொருளியல் துறையில்
இளங்கலைப் பட்டப்படிப்பை
இலயோலா கல்லூரியில்
பயின்று வருபவர்
இலக்கியம், கவிதை எழுதுவதில்
திறமையும் படைத்தவர்

